சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 43/2018

**PW 2 அருண்குமார்** 26.09.2025

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என கேட்டால் தோட்ட வேலை செய்து வருகிறேன். நானும் மனுதாரர்களும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மனுதாரர்கள் கேட்டுகொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தை பொருத்து நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். விபத்தை பற்றி கேள்விபட்டு தான் நான் போய் பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்த்ததாகவோ விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் நடைபெற்றது என முதல் விசாரணையில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தானது இறந்துபோன நபரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி